**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் சனிக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2026 இன்**

**அசல் வழக்கு எண்.19/2023**

நம்பி .... மனுதாரர்/வாதி

// எதிர் //

செந்தாமரைச்செல்வி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 18.02.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.S. சுரேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. நா. இராஜேஷ் கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது, மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சியை மனுதாரர்/வாதி தனது தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி உரிமையியல்

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:53 +0530

விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சுருக்கம்</u> :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார் என்றும், அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், அசல் வழக்கில் 30.04.2019 மனுதாரர்/வாதி பணி நீக்கம் தொடர்பான ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் வகைக்கு களக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் அவர்களை மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க வேண்டியது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமாய் உள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :**

இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்/வாதி அவரது பணி நீக்கம் தொடர்பான ஆவணங்களை குறியீடு செய்யும் வகைக்கு களக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல் ஆட்சியர் மற்றும் பணி நீக்க காலத்தில் களக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பணியில் இருந்து முன்னாள் தலைவர் அவர்களையும் கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி தாக்கல் செய்த வ.ம.எண்.02/2025 தாக்கல் செய்யப்பட்டு, கனம் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும்,

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:43:58 +0530

மனுதாரர்/வாதி அவரது பணி நீக்கம் தொடர்பான ஆவணங்களை அவரை கொண்டே குறியீடு செய்ய வாய்ப்பு இருந்தும், அசல் வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரரின் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை மனுதாரர்/வாதி தனது தரப்பில் கூடுதல் சாட்சிகளாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 30.04.2019 மனுதாரர்/வாதி பணி நீக்கம் தொடர்பான ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் வகைக்கு களக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் அவர்களை மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க வேண்டியது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமாய் உள்ளது என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**6)** எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்/வாதி அவரது பணி நீக்கம் தொடர்பான ஆவணங்களை அவரை கொண்டே குறியீடு செய்ய வாய்ப்பு இருந்தும், அசல்

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:44:03 +0530

வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7) அசல் வழக்கு, பிரதிவாதியிடம் இருந்து இழப்பீடு தொகையாக ரூ.5,00,000/-ஐ கேட்டு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக போடப்பட்டிருந்த நிலையில், இ.ம.எண்.2/2025 என்ற மனு தாக்கல் செய்து, களக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் செயலாட்சியராக பணிபுரியும் கோயில்மணி என்பவரையும், தலைவராக பணிபுரியும் ராஜசேகர் என்பவரையும், வாதி தரப்பில் கூடுதல் சாட்சிகளாக விசாரிக்க வேண்டுமென்று அனுமதிக்க மனு செய்ததில், இந்நீதிமன்றம் மேற்கண்ட மனுவை அனுமதித்ததன் பேரில், மேற்கண்ட ராஜசேகர் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ஆனால், இந்நீதிமன்றத்தில் இருந்து கோயில்மணி என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில், அவர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார் என்று அழைப்பாணை திரும்ப வந்துள்ளது தெரிகிறது. மனுதாரர்/வாதி ஏற்கனவே தாக்கல் செய்த மேற்கண்ட இ.ம.எண்.2/2025 ல் செயல் ஆட்சியர் கோயில்மணி என்று பெயர் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவர் வேறொரு அலுவலகத்திற்கு மாறுதலாகி சென்றதால், மனுதாரர்/வாதியால் அவரை விசாரிக்க இயலவில்லை என்பது தெரிகிறது. எனவே, இம்மனுவை தாக்கல் செய்து, பெயர் எதுவும் குறிப்பிடாமல், செயலாளர், களக்காடு தொடக்க வேளாண்மை



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:44:08 +0530

கூட்டுறவு கடன் சங்கம் என குறிப்பிட்டு, செயலாளரை விசாரிக்க இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. இம்மனு அனுமதிக்கப்பட்டால் மேற்படி கூட்டுறவு கடன் சங்கத்தில் தற்போது பணிபுரியும் செயலாளரை மனுதாரரால் தன் தரப்பு சாட்சியாக விசாரிக்க முடியும். எனவே, மனுதாரர்/வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்/வாதி மனுவில் சொல்லியுள்ள காரணங்களை கருத்திற்கொண்டும், மனுதாரர் அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலும், மேற்கண்ட ஏனைய காரணங்களாலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருகிறது.

**8)** முடிவாக, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியை, மனுதாரர்/வாதி தனது தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யலாம் என இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS

Digitally signed by RAMADHAS
Date: 2026.03.07 18:44:14 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.07 18:44:19 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம், நாங்குநேரி

இ.ம.எண்.3/2026 இன்

அ.வ.எண்.19/2023

நேரிய/வரைவு உத்தரவு

நாள். 07.03.2026

*IA.3 of 2026 in OS.19 of 2023*